Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Education in Moral Literature

**Dr. K. S. Kolappadhas**, Assistant Professor of Tamil,
Pioneer Kumaraswamy College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-1600-8034**
**DOI: 10.5281/zenodo.6619484**

## Abstract

*In Tamil literature, importance of Education is explained clearly. Education is the only thing that differentiates between humans and animals. Education is a tool which increases knowledge, self-thinking and helps creating new inventions. Education makes a man perfect and it is important to us more than money. Education contributes in developing our nation. Tamil literature gives more scope for learning and education. The value of Education is broadly explained in "Thirukkural". Certainly, education gives us a pure happiness to live.this article probes such evidences of education from the didactic literature.*

**Keywords:** Literature, Education, Knowledge, Self-thinking, Human, *Thirukkural*.

**References**

[1] Va.Suba, Manikam. *Neethi Noolkal Explanation*, Tamil Nilayam, T.Nager Chennai-17, 2007

[2] *Thirukkural Explanation*. Varthamanan Pathipakam, T.Nager, Chennai, 2007.

[3] *Pathinan Keezhkanaku Noorkal*. Varthamanan Pathipakam, T.Nager, Chennai, 2007.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# நீதி இலக்கியங்களில் கல்வி

**முனைவர் கோ. சி. கோலப்பதாஸ்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பயோனியர் குமாரசுவாமிக் கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-1600-8034
DOI: 10.5281/zenodo.6619484

**ஆய்வுசுருக்கம்**

*தமிழ் இலக்கியங்கள் கல்வியின் சிறப்புக்களை மிக ஆழமாக எடுத்துரைத்துள்ளன. விலங்குகளிடம் இருந்து மனிதனை வேறுப்படுத்திக் காட்டுவதற்கு கல்வியே கல்வியின் நோக்கம் அறிவைப் பெருக்குவது, சிந்தனையை மெருகேற்றுவது, புதியபுதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவது போன்றவை. அழிவில்லாத சிறப்புடைய செல்வம் கல்வி கல்வி அறிவு அதிகம் பெற்ற நாடே உலக வல்லரசுகளாக பிறநாடுகளை ஆட்டிப்படைக்கின்றன. ஒரு நாடு பொருளாதாரத்தில் முன்னேற வேண்டுமெனில் நாட்டுமக்கள் அனைவரும் கல்விஅறிவு பெற்றிருக்க வேண்டும். பல அறநூல்கள் கல்வி குறித்து எடுத்துரைத்துள்ளன. சிறந்த செல்வம் கல்விசெல்வமாகும். கல்வி சிறந்த இன்பம் தரும். கல்வியே அழகு ஆகும்*

**திறவுச்சொற்கள்:** இலக்கியங்கள், கல்வி, அறிவு, நோக்கம், கண்டுபிடிப்பு, *திருக்குறள்.*

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் கல்வியின் சிறப்புக்களை மிக ஆழமாக எடுத்துரைத்துள்ளன. தமிழில் நமக்கு கிடைத்த முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் கல்வி, தறுகண், புகழ்மை, கொடை எனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே என்று கூறுகிறது. இதில் முதலிடத்தில் இருப்பது கல்வி. ஒரு மனிதனை முழு மனிதனாக மாற்றுவது கல்வியாகும். உலக உயிர்களிடத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பவன் மனிதன். பகுத்தறிவு படைத்தவன் மனிதன். விலங்குகளிடம் இருந்து மனிதனை வேறுப்படுத்திக் காட்டுவதற்கு கல்வியே துணைபுரிகிறது. மனிதன் தன் இலக்குகளை அடைவதற்கு ஒரு கருவியாக இருப்பது கல்வியாகும். கல்வியின் நோக்கம் அறிவைப் பெருக்குவது, சிந்தனையை மெருகேற்றுவது, புதியபுதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவது போன்றவை. கல்வியில் ஏற்படும் நன்மைகள்ஆகும். மேலும் பொருளாதாரரீதியாக தன்னை வசதிப்படுத்திக் கொள்ளவும், சமுதாயநோக்குடைய மனிதனாக மாற்றுவதற்கும், பிறருக்கு உதவும் குணம் உடையவராக நம்மை மேம்படுத்திக் கொள்ளவும் கல்வி அவசிமாகிறது. நீதி இலக்கியங்களில் கல்விபற்றிய சிந்தனை எவ்வாறு உள்ளது என்பதனைப் பற்றியே இக்கட்டுரை அமைகிறது. குறிப்பாக நீதிஇலக்கியங்களில் சான்றோர்களின் ஒரு சிலகருத்துக்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

**கல்வியின்சிறப்பு**

கல்வி ஒரு வரை ஆண்மை உடைய மனிதனாக மாற்றுகிறது. கற்றோருக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு என்பது ஆன்றோர்வாக்கு. உலகத்திலேயே சிறந்த செல்வம் கல்வி செல்வமாகும்.

**கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவருக்கு**

**மாடல் லமற்றை யவை (குறள் -400)**

அழிவில்லாத சிறப்புடைய செல்வம் கல்விஅறிவு தான் மற்ற செல்வங்களை எல்லாம் அள்ளித் தரக்கூடியது. தீயால் அழிக்க முடியாது. பிறரால் கவர்ந்து செல்ல முடியாதது கல்வி ஆகும். அத்தகைய கல்வியைக் கற்று அனைவரும் மேன்மை அடைந்து உலகையும் மேன்மை அடையச் செய்யவேண்டும். இன்றைய நிலையில் கல்விஅறிவு அதிகம் பெற்ற நாடே உலக வல்லரசுகளாக பிறநாடுகளை ஆட்டிப் படைக்கின்றன. ஒருநாடு பொருளாதாரத்தில் முன்னேற வேண்டுமெனில் நாட்டுமக்கள் அனைவரும் கல்விஅறிவு பெற்றிருக்கவேண்டும்.

**கற்கை நன்றே கற்றை நன்றே**

**பிச்சை புகினும் கற்கை நன்றே (நறுந்தொகை)**

என்கிறது நறுந்தொகை பிச்சை எடுத்தாவது கல்விகற்க வேண்டும் என்று நம்முன்னோர்கள் கூறிஉள்ளனர். உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டுமாயின் கல்வி தேவை. உலகநாடுகளின் அறிவை, ஆற்றலை, மேம்பாட்டை, அறிவியலை நாம் பெற்றுக் கொள்ள கல்வி அறிவு தேவை. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்கிறான் தேசியக்கவி பாரதி அதற்கு நமக்கு கல்வி அறிவு தேவை.

**திருக்குறளில்கல்வி**

கல்வி எவ்வாறு கற்கவேண்டும் என்பதனைத் திருவள்ளுவர் மிகத்தெளிவாக எடுத்துரைக்கிறார். ஆனால் இன்றையக் கல்விமுறை வள்ளுவர் கூறும் கல்விமுறையாக இருக்கிறதா என்றால் கேள்விக்குறியே.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்கு தக. (குறள் -391)**

கற்பதற்குத் தகுதி உடைய நூல்களை மட்டுமே கற்க வேண்டும், குற்றமறக் கற்க வேண்டும், தெளிவாகக் கற்க வேண்டும். ஒரு நூலைக் கற்ற பின் அதில் எது தகுதியானது எது தகுதியற்றது என்பதனைத் தெரிந்து அதனைக் கற்றுக் கொள்ள வேண்டும். இதனைத் தெரிந்து கொண்டு படிப்பவனே சிறந்த அறிவுடையவன். அது மட்டுமில்லாமல் கல்வி கற்வறவனைப் போல நடந்து கொள்ள வேண்டும். ஆனால் இன்று பெரிய குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மெத்தப் படித்தவர்களாக இருக்கின்றனர். தான் கற்றக்கல்வியை நல்லனவற்றிற்கு பயன்படுத்தாமல் கெட்டனவற்றிற்குப் பயன்படுத்துகின்றனர். இதனை மாற்ற முற்பட வேண்டும். கல்வி நல்ல அறிவினைக் கொடுக்க வேண்டும். கல்வி இன்று வியாபாரமாகி விட்ட காரணத்தால் கல்விநிலையங்களில் நற்போதனைக்கான இடமுமில்லை ஒழுக்கக் கல்விக்கான போதனையுமில்லை.

ஒருவன் வாழ்வாங்கு வாழ்வதற்கு முக்கியம் கல்வி ஆகும். ஆகவேதான் வள்ளுவர்.

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**

**கண்ணென்ப வாழும் உயிர்க்கு (குறள் -392)**

என்கிறார். மனித உடலில் முக்கியமானது கண். புற உறுப்புக்களில் முக்கியமானது கண் ஆகும். ஒருவனுக்கு கண்வெளி உலகப்பார்வையை கொடுக்கிறது. இவ்வெளி உலகம் அவனுக்கு நிறைய அனுபவக் கல்வியைக் கற்றுக் கொடுக்கும். ஒருவன் வழிதவறாமல் நடப்பதற்கு கண் எவ்வளவு அத்தியாவசியத் தேவையோ அதுபோல எண்ணும் எழுத்தும் அவசியம் ஆகும். அடிப்படை அறிவு பெற

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

எண்ணும் எழுத்தும் அவசியமாகும். எண் இல்லாமல் எதுவும் இல்லை. கணிதத்தை எல்லா அறிவியலின் ராணி என்பார்கள். ஆகவே, அதனால் கணித அறிவும், எழுத்தும் (அதாவது இலக்கியக் கல்வி) முதன்மை என்கிறார். உயிர்களுக்கு எண்ணும் எழுத்தும் இன்றியமையாதது ஆகும். கல்லாதவர்களுக்கு இரண்டு கண்களும் புண் என்கிறார்.

**கண்ணுடையார்எல்லாம்கற்றோர்முகத்திரண்டு**
**புண்ணுடையார்கல்லாதவர். (குறள் -393)**

கல்வி அறிவில்லாதவர்கள் இரண்டு கண்களைப் பெற்றிருந்தாலும் அந்த கண்களால் எந்த பயனும் இல்லை என்கிறார்.

**கல்வியே அழகு**

அழகு என்பது கல்வி அழகே ஆகும். ஆனால் இன்று எல்லோரும் புறஅழகையே விரும்புகின்றனர். புறஅழகு நிலைத்து நிற்கக்கூடியது அல்ல. இன்று திருமணச் சந்தையில் கூட புறஅழகைத் தான் பிரதானமாகப் பார்க்கின்றனர். அதற்காகப் பல இலட்சங்களைச் செலவு செய்யும் மனிதர்களை இவ்வுலகில் நாம் காணமுடிகிறது. ஆனால் நாலடியில் அவ்வாறு கூறவில்லை.

**குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து**
**நல்லம் யாம்என்னும் நடுவு நிலைமையில்**
**கல்வி அழகே அழகு (நாலடியார் 131)**

தலைமையிரைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கடையிட்ட அழகும், மஞ்சள் பூசுவதால் உண்டாகும் அழகும் உண்மை அழகல்ல. மனத்தளவில் உண்மையாக நடந்து கொள்கிறோம் என்னும் நடுவுநிலையாம் ஒழுக்கவாழ்க்கையைத் தரும் கல்வி அழகே சிறந்த, உயர்ந்த அழகாகும். கல்வி அழகை இதைவிடச் சிறப்பாகச் சொல்லமுடியாது. புற அழகு அழகல்ல. கற்றவர்க்கு வேறு அணிகலன்கள் தேவையில்லை. ஆனால் இன்றைய பெண்ணியவாதிகள் இதனை ஏற்றுக்கொள்வதில்லை ஆளுமையைவளர்த் தெடுக்க முழுமையான ஆளுமை என்பது நடை, உடை, பாவனை எல்லாவற்றையும் சார்ந்தது ஆகும் என்பர். கல்வி மட்டும் ஒருவனை உயர்த்தி விடாது. எல்லா அழகும் சேர்ந்து இருந்தால் தான் சமூக அந்தஸ்து கிடைக்கும் என்கின்றனர். கற்றவருடன் சேரும் போது அறிவு தானாக வரும் என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

**கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளும் தலைப்படுவர் - தொல்சிறப்பின்**
**ஒண்ணிறப் பாதிரிப் பூச்சேர் தலாற்புத்தோடு**
**தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு (நாலடியார் 139)**

பழமையான சிறப்புடைய அழகிய பாதிரிப்பூ சேர்ந்திருப்பதால் புதிய மண்பானையானது தன்னிடத்தில் உள்ள தண்ணீர்க்கு தான் நறுமணத்தைக் கொடுத்து அத்தண்ணீரை நறுமண முடையதாக்கும். அதுபோல கல்லாதவர்கள் கற்றவர்களுடன் நட்புக் கொண்டு வாழ்ந்தால் அவர்கள் நல்லறிவு நாளும் உண்டாகப் பெறுவர். கற்றவர் சேர்க்கையினால் நல்லது நடக்கும் என்கிறது நாலடியார். ஏல்லா நூற்களையும் ஒருவனால் கற்றுக் கொள்ள முடியாது. ஆகவே கற்றவரோடு சேர்ந்து இருக்க வேண்டும். செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் என்கிறார் வள்ளுவர். கல்வி அறிவு உடைய மேன்மக்களை நட்பாக வைத்துக் கொள்ள வேண்டும். நல்லக்கல்வி அறிவுடையோர்களுடன் சேரும் போது நல்ல

பண்புகள் வளரும். அதுவே சிறந்த ஒழுக்கம் ஆகும். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது வள்ளுவர்வாக்கு. அதற்குச் சிறந்த நட்பு நல்லதாக அமைய வேண்டும்.

**தலை சிறந்தக் கல்வி**

கற்கவும், பொருளீட்டவும், இல்லற வாழ்வை இனிதே தொடரவும் இளம்பருவக்கல்வி இன்றியமையாதது இளமையில் கல் என்கிறார் ஔவையார். பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு மனிதனும் தினம் தினம் ஏதேனும் ஒன்றைக் கற்றுக் கொண்டிருக்கிறான். அது அனுபவக் கல்வியாகவோ அல்லது நூல் சார்ந்த கல்வியாகவோ இருக்கின்றது. திருவள்ளுவர்,

**"தொட்டனைத் தூறும்ம ணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு" (குறள்.96)**

என்ற குறட்பாவில் மணற்பாங்கான நிலத்தில் எவ்வாறு தோண்டத் தோண்டநீர் ஊறுகின்றதோ, அதுபோலவே அறிவானது நிறைய நூற்களைப் படிக்கப் படிக்க வளரும் என்னும் கருத்தை விளக்குகிறது. மேலும், ஔவையாரும், "கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு" என்கிறார். எனவே நாம் நிறைய நூற்களை வாழ் நாள் முழுவதும் படிக்க வேண்டும்.

**பல்லவையுள் நல்லவை கற்றலும்பாத் துண்டாம்**
**இல்லற முட்டா இயற்றலும் - வல்லதின்**
**தூனி ஒரு பொருளாக்கவும் இம்மூன்றும்**
**கேள்வியு ளெல்லாந் தலை (திரிகடுகம்.31.)**

பல நல்ல நூற்பொருள்களைக் கற்றுணர்தலும், பிறருக்குக் கொடுத்தலும், இல்லாளொடு கூடிச் செய்யும் அறமானது குறைபடாமல் செய்தலும், முயற்சியால் காரியங்களைச் செய்து முடித்தலும் ஆகியவை கல்விகள் எல்லாவற்றிலும் தலைசிறந்து என்கிறது திரிகடுகம் எனவே தான் வள்ளுவப் பெருந்தகை. "முயற்சி திருவினையாக்கும்" என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது. அதாவது, 'கல்வி' எனும் முயற்சி ஒருவனுக்கு இருக்குமானால் அவன் இவ்வுலகில் எந்த விதமான சாதனையையும் செய்யமுடியும். கல்வியால் ஏற்படும் இன்பம் ஆறறிவு படைத்த உயிர்கட்கு அறவழியில் கிடைக்கும் இன்பம் கல்வியே. 'இரத்தல் இழிவு' என்று போதித்த தமிழ் இலக்கியங்கள் 'கல்விக்காக யாசித்தல் இழிவன்று' என்றுரைப்பது கல்வியின் சிறப்பை உணர்த்துவதாய் அமைகிறது.

**"பிச்சைபுக் காயினுங் கற்றன் மிகவினிதே**
**நற்சவையிற் கைகொடுத்தல் சாலவு முன்னினிதே**
**முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே**
**தெற்றவு மேலாயார்ச் சோர்வு (இனியவை நாற்பது.-1)**

கற்பது மட்டுமல்ல, கற்றறிந்தவர் கூறக் கேட்பதும், அதன் வழி நடப்பதும் கூட இன்பம் பயப்பது ஆகும் என்கிறது இனியவை நாற்பது. ஒருவன் நாள்தோறும் குற்றம் செய்யாதவனாய் கற்றல் மிகவும் இனிது என்றும், பேசுவதற்குரிய கலையை அறிந்து அதற்கேற்ப பேசும் அவையஞ்சாதவனின் கல்வி இனிது என்றும் உரைக்கிறது. கல்வி அறிவுடையவர்கள் முன்னிலையில் தாம் கற்ற கல்வியினைத் தயங்காது எடுத்துக் கூறுவது இன்பம் பயக்கக் கூடிய ஒன்றாகும்.

**கற்றார் முன் கல்வியுரைத்தல் மிகவினிதே**
**மிக்காரைசேர் தன்மிகமான முன்னினிதே**
**யெட்டுணையாது மரவாது தானீத**

**லெத்துணையு மாற்றலினிது. (இனியவைநாற்பது.16)**

**ஒழுக்கக்கல்வி**

ஆசாரக்கோவை ஒழுக்கக் கல்வியைப் கூறுகின்றது. ஒழுக்கம் மனிதநேயத்துள் முக்கியமானது. அதனை எண்குணங்களாக உரைக்கின்றது.

**“நன்றியறிதல் பொறை உடைமை இன்சொல்லோடு**
**இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு**
**ஓப்புரவு ஆற்று அறிதல் அறிவுடைமை**
**நல்லினத் தாரோடு நட்டல் இவைஎட்டும்**
**சொல்லிய ஆசாரவித்து” (ஆசாரக்கோவை.1)**

என்ற பாடல் நன்றி மறவாமை, பொறுமை, இனியசொல், எல்லா உயிர்க்கும் துன்பம் செய்யாமை, கல்வி, ஒப்புரவு அறிதல், அறிவுடைமை, நல்லாரோடு நட்பு கொள்ளல் போன்ற எட்டும் ஒழுக்கங்கள் ஆகும். காலை முதல் இரவு வரை நாம் செய்ய வேண்டிய செயல்கள் வகுத்துரைக்கப் படுகின்றன.

**“வைகறை யாமம் துயில் எழுந்துதான் செய்யும்**
**நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்**
**தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே**
**முந்தையோர் கண்டமுறை” (ஆசாரக்கோவை.4)**

வைகறைப் பொழுதில் உறக்கத்திலிருந்து எழுந்து, நல்லறம் செய்து, வருவாய்க்கான செயலையும் செய்து, தந்தையும் தாயையும் தொழுது எந்தச் செயலையும் செய்வது வாழ்வியல் அறக்கல்வியாகும். நன்கு குளித்து கால் கழுவி வாய் பூசி உண்பவரே உண்டவராவார்.

**“சொல்லிற் செவி கொடுத்துக் கேட்டீக மீட்டும்**
**வினாவற்க சொல்லொழிந் தக்கால் (ஆசாரக்கோவை.74)**

ஆசிரியர் கூறுவதை அடக்கத்தோடும் ஆர்வத்தோடும் மாணவர்கள் கேட்க வேண்டும். ஆசிரியரின் அமைதியை குலைக்கும் வண்ணம் செயல்படக் கூடாது. ஆனால் இன்று சாத்தியமில்லாத ஒன்றாக உள்ளது. கல்வி கற்கும் முறையை ஆசாரக்கோவை வலியுறுத்துகின்றது.

கற்றவர் சபையில் எடுத்துரைத்தல்

ஒருவன் தான் அறிந்தவற்றை சபை நடுவே எடுத்துக் கூற அச்சம் கொள்வதால் அவனது அறிவு பிறருக்கு பயன்படாமல் போய்விடும். ஆகையால், சபையில் தான் கற்றவற்றை எடுத்துகூற அஞ்சுதல் கூடாது என்பதனை,

**“செல்வக் குடியுட் பிறத்தலும் பல்லவையுள்**
**அஞ்சுவான் கற்ற அருநாலும் இன்மூன்றும்**
**துஞ்சுமன் கண்டகனா” (திரிகடுகம்.7)**

என்னும் பாடலடிகளின் வாயிலாக நூல்கள் பல கற்றறிந்த சான்றோர்கள் கூடியுள்ள சபையில் கற்றவற்றை எடுத்துக் கூறும் துணிவில்லாதவனது கல்வியறிவு ‘ஊமை கண்ட கனவைப் போல’ யாருக்கும் பயனில்லாமல் போய்விடும் என்று திரிகடுகம் கூறுவதை காணலாம். இதனை திருவள்ளுவர்,

**“கல்லாதவரின் கடையென்ப கற்றறிந்தும்**
**நல்லார் அவையஞ் சுபவர் (குறள்.729)**

என்ற குறட்பாவின் வழி அறியலாம். கற்றோர் நிறைந்த அவையில் பேச அஞ்சுபவரைப் போர்க்களத்தில் கோழையின் கையில் ஒளி மிக்கவாய் இருப்பது போன்று என்றும், கல்வி கல்லாதவரினும் கீழான அறிவுடையவர் என்றும், உயிரோடு இருப்பினும் இறந்தவருக்கு ஒப்பானவர் என்றும் குறள் குறிப்பிடுகிறது. பிறர் கற்றகல்வியை ஆராயாமல் செவியால் கேட்டவற்றைக் கொண்டு குற்றம் கூறுவது எது போல என்றால் உமியைக் குத்தி கை வலித்து வருந்துவது போலாகும் என்று கூறுகின்றது. அதாவது பிறர் கூறுகின்ற கருத்தை மறுக்க வேண்டும் என்பதற்காக அது உண்மைதானா என ஆராயாமல் குறை கூறக்கூடாது. அவர்கள் கூறியது உண்மைதான் என்று நிரூபிக்கும் போது நம்முடைய மனமே நம்மை வருத்தமடைய செய்யும் என்பதனைச் சுட்டிக் காட்டுகின்றது. சான்றாக, **“உமிக்குத் திக்கை வருந்துவார்” (திரிகடுகம்.28.)** என்னும் பாடலடிகள் கருத்தைத் தெளிவுபடுத்துகிறது.

**நிறைவுரை**

கல்வி ஒரு மனிதனை முழுமனிதனாக மாற்றியமைக்கும் தன்மையுடையது. கல்வியில் சிறந்தவன் நல்ல சிந்தனையாளனாக, விஞ்ஞானியாக. உயர்மனிதனாக உயர்பதவிகளை அலங்கரிக்கின்றனர். கல்வி என்பது வெறும் பொழுதபோக்கு அல்ல. ஆனால் இன்று கல்வி வியாபாரப் பொருளாகியள்ளது அதன் காரணமாக ஆசிரியர் மாணவர் உறவு கேள்விக் குறியாகியுள்ளது என்பது வெள்ளிடை மலை. கல்வியிலும், பண்பாட்டிலும், கலாச்சாரத்திலும் உயர்ந்த நாடே உன்னத நிலையை அடைய முடியும். இன்று கல்வி பல முனைகளில் பிளவு பட்டுள்ளதாகக் காணப்படுகிறது. ஏழைகளுக்கு ஒரு விதமானக் கல்வியும் வசதி படைத்தோருக்கு வேறுவிதமானக் கல்வியும் இந்நாட்டில் உள்ளது. இந்த நிலை மாறவேண்டும். குமரி முதல் இமயம் வரை நாம் அனைவரும் சமம் என்கிறோம் ஆனால் கல்வியால் பிரிந்து இருக்கிறோம். பணம் இருந்தால் தான் சிறந்தகல்வி என்ற நிலை உள்ளது. இத்தகைய நிலை மாற வேண்டும். சாமானியனுக்கும் சிறந்த கல்வி கிடைக்க வேண்டும். ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயம் உருவாக ஏற்றத்தாழ்வு அற்ற கல்வி வேண்டும். பாடத்திட்டத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வு மாற வேண்டும். கல்வி தனியார் மயம் ஆனதன் விளைவு உலகில் மாணவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு உருவாகிவிட்டது. மானிட சமுதாயம் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமெனில் கல்வி அனைவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். கல்வியில் ஏழை வசதி படைத்தவன் பாகுபாடு இருக்கக் கூடாது. குமரி முதல் இமயம் வரை ஒரேநாடு என்றால் கல்வியும் அவ்வாறே அமைய வேண்டும்.

**துணைநூற்பட்டியல்**

[1] வ.சுப.மாணிக்கனார். *நீதி நூல்கள் –உரை*. தமிழ் நிலையம், தி.நகர்.சென்னை, 2007.

[2] நாமக்கல் கவிஞர். *திருக்குறள்-உரை*. வர்த்தமானன் பதிப்பகம், திநகர்.சென்னை, 2007.

[3] *பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும்*. தமிழ் நிலையம், சென்னை. 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.